








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 06.12.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- நியமனங்கள்













## தமிழக நிகழ்வுகள்

- **'கஜா'** புயல் பாதித்த பகுதிகளை சீரமைத்து கட்டமைக்க தனிப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டங்களைச் செயல்படுத்தவுள்ள அந்தப்பிரிவுக்கு, **'கஜா புயல் மறுகட்டுமானம், மறுசீரமைப்பு மற்றும் பேரிடரில் இருந்து மீளுதல்'** என பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுக்கென தனியாக **2 IAS** அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
    - இத்திட்டத்தின் இயக்குநராக **டி. ஜெகந்நாதன்** நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் கல்வியியல் சேவைகள் கழகத்தின் நிர்வாக இயக்குநராக உள்ளார்.

- **சாகித்ய அகாதெமி விருதுக்கு** தலைசிறந்த எழுத்தாளரான **எஸ்.ராமகிருஷ்ணன் தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
    - இது அவர் எழுதிய **சஞ்சாரம்** என்ற **நாவலுக்கு** மத்திய அரசினால் வழங்கப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- ஜெர்மனியில் உள்ள முனிச் நகரத்தில் நடந்த சர்வதேச துப்பாக்கி சுடுதல் கூட்டமைப்பின் (**ISSF**) பொதுக்குழு கூட்டத்தில், 4 துணைத் தலைவர்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. பஞ்சாப் மாநில முதலமைச்சர் அமரீந்தர் சிங்கின் மகன் **ரணிந்தர் சிங், துணைத்தலைவராக தேர்வானார்**. இதன்மூலம் **சர்வதேச துப்பாக்கி சுடுதல் கூட்டமைப்பில் துணைத்தலைவராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர்** என்ற பெருமையை அவர் பெற்றார்.
    - 2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்திய தேசிய துப்பாக்கி சுடுதல் சங்கத்தின் (**NRAI**) தலைவராக ரணிந்தர் சிங் இருந்து வருகிறார்.

- இந்தியாவின் முதல் **'ஆந்தை விழா'** புனேவின் புரந்தார் வட்டத்திலுள்ள **பிங்கோரி கிராமத்தில் நவம்பர் 29** அன்று நடந்தது. **எலா அறக்கட்டளையால்** (இயற்கைக் கல்வி மற்றும் பாதுகாப்புக்காக இயங்கும் ஓர் அரசுசாரா அமைப்பு) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இரண்டு நாள் விழாவானது, ஆந்தைகளின் பாதுகாப்பு குறித்த தகவல்களை வழங்கியது.

- இந்திய தொழில்கள் கூட்டமைப்பின்(CII), **(வேளாண் தொழில்நுட்ப இந்தியா-2018) 13ஆவது** கண்காட்சியை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், டிசம்பர் 01 அன்று சண்டிகரில் தொடங்கி வைத்தார். இந்தக் கண்காட்சியின் கருப்பொருள், **'Technology in Agriculture: Increasing Farmer's Income'** என்பதாகும். 4 நாள் நடக்கும் இந்த சர்வதேச வேளாண் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியை இந்திய தொழில்கள் கூட்டமைப்பு(CII) ஏற்பாடு செய்துள்ளது.

- **அசாம் மற்றும் அருணாச்சல பிரதேசத்தின்** கிழக்கு பகுதியில் உள்ள **பிரம்மபுத்திராவின் வடக்கு மற்றும் தெற்கு கரையோரங்களை இணைக்கும்** இந்தியாவின் மிக நீண்ட இரயில்பாதை பாலமான **போகிபல் பாலத்தை, பிரதமர் நரேந்திர மோடி டிசம்பர் 25-ஆம் தேதி** திறந்துவைக்க உள்ளார்.
  - அருணாச்சல பிரதேச எல்லையில் உள்ள தண்டவாளங்களை மேம்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ள உள்கட்டமைப்பு திட்டங்களில் போகிபல் பாலம் உள்ளது குறிப்பிடத்தக்கது.
  - பாலத்தின் நீளம் **4.94 கி.மீ** ஆகும்.

- நீர்வள ஆதாரங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை மறுசீரமைப்பு அமைச்சர் **நிதின் கட்கரி புதுடெல்லி இந்தியா நீர்வாழ் உச்சி மாநாடு 2018 – ஐ தொடங்கி வைத்துள்ளார்.**
  - இந்த மாநாடு தேசிய தூய்மை கங்கை திட்டம் மற்றும் கங்கை நதி படுகை மேலாண்மை மற்றும் ஆய்வு மையம் சார்பில் தொடங்கப்பட்டது.
  - இந்த மாநாடு நாடு முழுவதும் உள்ள மிகபெரிய நீர்பாசன பிரச்சனைகளை மாநாட்டில் ஆலோசித்து அதற்கான மாதிரி தீர்வுகளை வழங்குவர்.
  - கங்கை நதிதூய்மை திட்டம் தொடங்கிய ஆண்டு 1985 என்பது குறிப்பிடத்தக்கது.

- முழு கடலோர பாதுகாப்பு கருவியின் வலிமையை சோதிக்க **இந்திய கடற்படை** அடுத்த மாதத்தில் ஒரு பெரிய அளவிலான கடலோர பாதுகாப்பு பயிற்சியை நடத்த உள்ளது. – **"Tropex"** என்று கூறுவர்.
  - இதனை இந்திய கடற்படையின் தலைமை அதிகாரியான அட்மிரல் சுனில் லன்பா அறிவித்தார்.



We Shine Academy TM

- இது ஜனவரி முதல் தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

- இஸ்ரோவின் **ஜிசாட் - 11 (GSAT – 11)** செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.
  - இது இஸ்ரோவின் மிக அதிக எடை கொண்ட அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக் கோளாகும். இதன் எடை – **5854kg.**
  - இது பிரெஞ்ச் கயானாவின் கௌரவ் விண்வெளி ஏவு தளத்திலிருந்து ஏரியன் **5விஏ – 246** என்ற ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

## உலக நிகழ்வுகள்

- **UNFCCC** (காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா. கட்டமைப்பு அவை), தரப்புகளின் 24ஆவது மாநாடு (**COP 24**) ஆனது டிசம்பர் 3-14 வரை போலந்தின் **கடோவிஸ்** நகரத்தில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில், பாரிஸ் ஒப்பந்த செயல் திட்டத்தின் கீழ், பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தை செயல்படுத்துவது தொடர்பான இலக்குகள் நிர்ணயிக்கப்பட உள்ளன.

- **'ஆதரவற்றோரை கடத்தி வியாபாரம் செய்தலை – Orphanage Trafficking'** நவீன அடிமைத்தனத்தின் ஒரு வடிவமாக அங்கீகரித்துள்ள **உலகின் முதல் நாடாக ஆஸ்திரேலியா** மாறியுள்ளது. இதனால், அடிமைத்தனத்தின் ஒரு வடிவமாக குழந்தைகளை வேண்டுமென்றே ஆதரவற்றோர் இல்லத்தில் புகுத்தும் செயலை ஆஸ்திரேலியா குற்றமாக அறிவித்துள்ளது. உலகளவில் இது முதல் நடவடிக்கையாக கருதப்படுகிறது.

- மியான்மரில் வாழும் ரோஹிங்கிய சிறுபான்மையினரின் மீதான வன்முறைக்கு எதிராக குரல் எழுப்புவதில் தோல்வியடைந்ததால், அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மரியாதைக்குரிய தலைவர் **ஆங் சான் சூகீயிடமிருந்து பாரிஸ் சுதந்திர விருது பறிக்கப்பட்டுள்ளது.**
  - இதனால், பிரெஞ்சு தலைநகரின் சிறப்பான இந்தப் பாரிஸ் சுதந்திர விருதை இழக்கும் முதல் நபராக ஆங் சான் சூகீ

We Shine Academy™

மாறியுள்ளார். இது தவிர ‘Amnesty International’ எனும் பன்னாட்டுப் **பொதுமன்னிப்பு அமைப்பானது சூகீக்கு தான் வழங்கிய ‘நம்பிக்கைக்கான அடையாளம் - Ambassador of Conscience’** என்ற விருதினையும், கைப்பற்றியுள்ளது.

- பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்க **G20** உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, 12 ஆண்டுகால இடைவெளிக்குப் பின், அர்ஜென்டீனாவின் **பியூனஸ் ஏர்சில் 2ஆவது** ரஷ்யா - இந்தியா – சீனா **(RIC)** முத்தரப்பு பேச்சுவார்த்தை பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் சீன அதிபர் சீ ஜின்பிங் ஆகியோரிடையே நடைபெற்றது.

- **கேம்பிரிட்ஜ்** அகராதி **‘நோமோபோபியா’** என்ற சொல்லை, 2018ஆம் ஆண்டின் **‘மக்களின் சொல்’(People’s World)** என அறிவிக்கப்பட்டுள்ளது. அலைபேசி இல்லாமலோ, அதைப் பயன்படுத்த முடியாமலோ இருக்கும்போது ஏற்படும் படபடப்பு, கவலை ஆகியவற்றைக் குறிக்கும் சொல் ‘Nomophobia – No Mobile Phobia’. அகராதியின் ஆசிரியர்கள், ‘Nomophobia’, ‘Gender gap’, ‘Ecocide’, ‘No-platforming’ ஆகிய சொற்களை முன்வைத்தனர். அவற்றில் ‘Nomophobia’ என்ற சொல் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

- வெளியுறவு துறை அமைச்சர் **சுஷ்மா ஸ்வராஜ்** பங்கேற்ற இந்திய – ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கு **(UAE)** இடையேயான **கூட்டுக்குழு கூட்டம் செவ்வாய் கிழமை** நடைபெற்றது.
  - இதில், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தில் அமெரிக்க டாலருக்கு மாற்றாக இரு நாடுகளின் பணத்தை பயன்படுத்தி கொள்ளும் வகையிலான ஒப்பந்தம் உள்பட **2 ஒப்பந்தங்கள்** கையெழுத்தாகின.

## நியமனங்கள்

- மாற்றுத்திறனாளிகளுக்கு டிஜிட்டல் அதிகாரமளித்தலுக்காக **UNESCO/எமிர் ஜபீர் அல்-அஹ்மத் அல் ஜபீர் அல் சபா பரிசுக்கு** வங்கதேச மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் வழக்குரைஞரான **வஷ்கர் பட்டாச்சார்ஜி தேர்வு** செய்யப்பட்டுள்ளார். பார்வை, அச்சு

மற்றும் கற்றல் குறைபாடுகள் உள்ள வங்கதேச மக்களுக்காக ஒரு முன்மாதிரி அகராதியை பட்டாச்சார்ஜி உருவாக்கியுள்ளார். மேலும் மாற்றுத் திறனாளிகள் தங்களின் சொந்த வியாபாரத்தை தொடங்குவதற்காக ஒரு சிறப்பு சிறுகடன் (**e-micro**) திட்டத்தையும் அவர் வடிவமைத்துள்ளார்.

- முன்னாள் சர்வதேச தடகள மற்றும் தொழிலதிபரான **ஜான் ரிட்ஜென் IAAF யின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - 215வது கவுன்சில் கூட்டத்தின் முதல் நாளில் இவரது நியமனம் ஒப்புதல் கையெழுத்தானது.

We Shine Academy™